பக்கங்கள் 18+7

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கக் கோரும் மனு இன்று தள்ளுபடி!

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் உரிய வகையில் நிறைவேற்றப் படாததால் அதனைப் பொதுமக்கள் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 31 திங்கட்கிழமை 15.07.2024 அதிர்வு 350



# சாவகச்சேரி வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் யார்?

## இன்று மீண்டும் அங்கு வந்த வைத்தியர் அர்ச்சுனா

## நீண்ட விவாதங்களின் பின்னர் வெளியேறினார்





(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன், த.சுபேசன்)

யாழ். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் யார் என்பது தொடர்பில் வைத்தியர் ரஜீவுக்கும் வைத்தியர் அர்ச்சுனாவுக்கும் இடையில் இன்று நீண்ட விவாதங்கள் இடம்பெற்று பின்னர் வைத்திய சாலையில் இருந்து வைத்தியர் அர்ச்சுனா வெளியேறினார். 04

# சுமுகமாக இயங்குகின்றது வைத்தியசாலை!

## எந்தவிதப் பிரச்சினைகளும் இல்லை என்கிறார் வைத்தியர் ரஜீவ்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன், த.சுபேசன்)

“சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பணிகள் வழமைபோல் சுமுகமாக நடைபெற்று வருகின்றன. எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் நோயாளிகள் தமக்கான சிகிச்சைகளைப் பெற்று வருகின்றார்கள்.”

– இவ்வாறு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் தெரிவித்தார்.

வைத்தியசாலையின் இன்றைய நிலவரம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வைத்தியர் அர்ச்சுனா இன்று காலை அலுவலகத்துக்கு வருகை தந்து தன்னுடைய காலப் பகுதியில் ஏற்கனவே இருந்த அரச கடிதங்களைப் பார்வையிட்டு கையொப்பத்தைப் பதிவிட்டிருந்தார். 04



# திருகோணமலையில் கப் வாகனத்துடன் எரியூட்டப்பட்ட நிலையில் ஆணின் சடலம்!

## பொலிஸார் தீவிர விசாரணை

திருகோணமலை, பம்மதவாச்சி காட்டுப் பகுதியில் கப் வாகனத்துக்குள் எரியூட்டப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை -அலஸ்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 42 வயதான வியாபாரியே சடலமாக மீட்கப்பட்டார் என ஆரம்பகட்ட விசாரணையில் மூலம் தெரியவந்தது.

கடந்த 12ஆம் திகதி கப் வாகனத்துடன் மேற்படி நபர் காணாமல் போனார் என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து அந்த நபரின் வாகனம் அதேநாளில் அதிகாலை 2.40 மணியளவில் வில்கம் விகாரைப் பகுதியை தாண்டி மொரவெவ பகுதிக்குச் செல்வதைப் பொலிஸார் கண்டிறிந்தனர்.

சி.சி.ரி.வி. காணொளி மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த விடயம் தெரியவந்தது என்று பொலிஸார் கூறினர்.

குறித்த வாகனம் மொரவெவ பிரதேசத்தைத் தாண்டி செல்லவில்லை என்று சி.சி.ரி.வி. காணொளி மூலம் கண்டறியப்பட்டதை அடுத்து பம்மதவாச்சிப் பகுதியில் மணல் ஏற்றுவதற்குப் பயன்படுத்தும் வீதியூடாகப் பொலிஸார் சோதனை செய்தனர்.

இதன்போது காட்டு வழியினூடாக கப் வாகனம் சென்ற வேளை வாகனத்தின் முன் கண்ணாடி உடைந்து வீழ்ந்து கிடந்ததைப் பொலிஸார் அவதானித்தனர்.

அவ்வழி ஊடாகத் தொடர்ந்து சென்று பார்த்தபோது நீ னுயுஊ - 9245 என்ற இலக்கமுடைய டாட்டா கப் வாகனத்தில் எரியூட்டப்பட்ட நிலையில் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளை மொரவெவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மன்னார் கூட்டுறவுச் சபை மண்டபத்தை நீதிமன்ற பயன்பாட்டுக்குச் சுவீகரிக்க அமைச்சரவை அனுமதி

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தை நீதிமன்றப் பயன்பாட்டுக்காகச் சுவீகரிக்க அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றம் அருகே காணப்படும் மாவட்ட கூட்டுறவுச் சபையின் பழைய கட்டடம் அமைந்துள்ள காணியைச் சுவீகரிக்கவே அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.




கடந்த ஜுன் மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த விடயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சபைக் கட்டடக் காணி 35 வருட குத்தகைக்குப் பெற்றே கட்டடம் அமைக்கப்பட்ட நிலையில் 35 ஆண்டு காலம் நிறைவடைந்தமையால் கட்டடத்தில் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை எனவும், இதனால் நிலக் குத்தகையைப் புதுப்பித்துத் தருமாறும் மாவட்ட கூட்டுறவுச் சபை, மாகாண கூட்டுறவுத் திணைக்களம் ஊடாக மாவட்ட அரச அதிபருக்கு இந்த ஆண்டின் பெப்ரவரி மாதம் விண்ணப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# மாணவர்களின் எதிர்காலம் கருதிச் செயற்படும் ஜனாதிபதிக்கு நன்றியுள்ளவராக இருப்போம்!

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

மாணவர்களின் எதிர்காலம் கருதி செயற்படும் ஜனாதிபதிக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாக செயற்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எ ஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய, நாட்டிலுள்ள வறியக் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கும் தேசிய திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்துக்கான நிகழ்வு நேற்று (14) நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரண்டு கல்வி வலயங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட 662 மாணவர்களுக்கு இதன்போது புலமைப் பரிசில் நிதிக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எ ஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் மேலதிக சிரேஷ்ட செயலாளர் சமன் பந்துசேன, வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்,

இலவச கல்வியை வழங்கும் நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்



ளது. கொவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, இயற்கை அனர்த்தம் என நாடு நெருக்கடியான சூழ்நிலையில் காணப்பட்ட போதும், இலவச கல்வி மற்றும் மருத்துவ சேவையை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

அரசு இவ்வாறான நிலையில் இலவச சேவைகளை முன்னெடுப்பதில் பின்வாங்கவில்லை. இளம் சமூகத்தினரின் கல்விக்கான முதலீடுகள் என்பது நாட்டின் முதுகெலும்பாகும். இதன் அடிப்படையில் நாட்டில் இலவசக் கல்விமுறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக பாரிய அளவில் நிதி செலவிடப்படுகிறது.

ஜனாதிபதி நிதியமானது பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. இலவச மருத்துவ சேவைக்கு அப்பால், கடுமையான நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்கான நிதியை ஜனாதிபதி செயலகம் வழங்கி வருகிறது.

மாணவர்களுக்கான இலவச கல்வி வழங்கப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. இந்த செயற்பாடுகளை தவிர பாடசாலை மாணவர்களின் நாளாந்த கற்றல் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் ஜனாதிபதியால் இந்தப் புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பல சிக்கல்களுக்கு மத்தியிலும், மாணவர்களின் எதிர்காலம் கருதி ஜனாதிபதி இவ்வாறான தீர்மானம் மேற்கொண்டுள்ளமை தொடர்பில் மாணவர்களும், பெற்றோர்களும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். கல்வி மாத்திரமே சமூகத்தை மாற்றக் கூடிய ஆயுதமாகக் காணப்படுகின்றது.

ஆகவே, சிறந்த கல்வியை பெற்றுக் கொள்வதைப் போலவே, திறன் மேம்பாடுகளையும் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். நாட்டின் எதிர்காலத்தை மாற்றுபவர்களாக மாணவர்கள் உருவாக வேண்டும்.– என்றார்.





# வைத்தியர்களுக்கு அர்ச்சுனா எச்சரிக்கை!

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன், த.சுபேசன்)

“வைத்தியர்கள் மீண்டுமொருமுறை பணிப்புறக்கணிப்பு செய்தால் பொது மக்களுக்கும் வைத்தியர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படக்கூடும். அதனை வைத்தியர்கள் உணர வேண்டும்.”

– இவ்வாறு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

இன்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வருகை தந்த வைத்தியர் அர்ச்சுனாவிடம் ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்றுடன் என்னுடைய விடுமுறை முடிவடைந்ததால் நான் இன்று பணிக்குத் திரும்பியுள்ளேன்.

நான் வைத்தியர் ரஜீவை தொந்தரவு செய்வதற்கோ வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களைத் தொந்தரவு செய்வதற்காகவோ இங்கு வரவில்லை. வைத்தியர் ரஜீவ் என்னுடைய வேலையைச் செய்தால் எனக்குச் சந்தோசம்.



கொழும்பில் முக்கிய அதிகாரிகளோடு கலந்துரையாடலில் ஈடுபட்டேன். நாளை சுகாதார அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர். வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் அந்தக் குழுவிடம் பொது மக்கள் தங்கள் முறைப்பாடுகளை முன்வைக்கலாம்.

நாளை சுகாதார அமைச்சரால் எனக்கு உத்தியோகபூர்வ கடிதம் ஏதும் தரப்பட்டால் அதனை முழுமையாக ஏற்கத் தயாராகவுள்ளேன்.

வைத்தியர்கள் மீண்டுமொரு முறை பணிப்புறக்கணிப்புச் செய்தால் பொது மக்களுக்கும் வைத்தியர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படக்கூடும். அதனை வைத்தியர்கள் உணர வேண்டும். நாங்கள் பொதுமக்களின் மனதை வெல்ல வேண்டும்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்களால் பாலியல் தொந்தரவுகள் இடம்பெறுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் அதனை முறைப்பாடு செய்ய முன்வராததால் கள்வர்கள் தப்பித்துக் கொள்கின்றார்கள். அதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சாவகச்சேரி...

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக இருந்த வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை மாற்றக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் கடந்த வாரம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பதில் வைத்திய அத்தியட்சகருக்கு ஆதரவாக தென்மராட்சி பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களின் ஏற்பாட்டில் மாபெரும் போராட்டம் நடத்தப்பட்ட நிலையில், பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா சுகவீன விடுமுறை எனத் தெரிவித்து கடந்த திங்கட்கிழமை கொழும்புக்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர கோபால மூர்த்தி ரஜீவ் கடந்த செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

எனினும், அந்த நியமனம் தவறானது என்றும், தான் விடுமுறையில் இருப்பதாகவும், தானே தொடர்ந்தும் பதில் வைத்திய அத்தியட்சகர் என்றும் வைத்தியர் அர்ச்சுனா கடந்த ஒரு வாரமாகத் தெரிவித்து வந்தார்.

இன்றைய தினம் விடுமுறையை முடித்துக்கொண்டு கடமையைப் பொறுப்பெடுக்கப் போவதாகத் தெரிவித்த வைத்தியர் அர்ச்சுனா, காலை 9.30 மணியளவில் வைத்தியசாலைக்குள் உட்பிரவேசித்தார்.

வைத்தியசாலையைச் சுற்றி அவர் பார்வையிட்டதோடு வைத்திய அத்தியட்சகர் காரியாலயத்துக்குள் சென்று, வைத்தியர் ரஜீவை ஆசனத்திலிருந்து எழும்புமாறும், இது தன்னுடைய ஆசனம் என்றும் முரண்பட்டுக்கொண்டார்.

தனக்கு உத்தியோகபூர்வமாக மத்திய சுகாதார அமைச்சில் இருந்து தன்னை நீக்குவதற்கான கடிதம் வராத நிலையில் தானே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் எனத் தெரிவித்த வைத்தியர் அர்ச்சுனா, தனது விடுமுறை நேற்று நிறைவடைந்த நிலையில் இன்று மீண்டும் கடமைக்கு வந்துள்ளேன் என்று தெரிவித்தார்.

தற்போதய பதில் வைத்திய அத்தியட்சகர் ரஜீவ் தன்னுடைய நியமனக் கடிதங்களை வைத்தியர் அர்ச்சுனாவுக்குக் காட்டியபோதும் தானே வைத்திய அத்தியட்சகர் என முரண்பட்டுக்கொண்டு வைத்திய அத்தியட்சகர் ஆசனத்தில் வைத்தியர் அர்ச்சுனா அமர்ந்தார்.

இதன்போது தலையிட்ட சாவகச்சேரிப் பொலிஸார், வைத்தியர் அர்ச்சுனாவை அத்தியட்சகர் காரியாலயத்தில் இருந்து அழைத்துச் சென்று மற்றுமொரு மூடிய அறைக்குள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

பொலிஸாருடனான நீண்ட கலந்துரையாடலின் பின்னர் நாளை சுகாதார அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்டக்குழு யாழ்ப்பாணத்துக்கு வரும்போது இது தொடர்பில் முடிவு எட்டப்பட்டும் என்று வைத்தியர் அர்ச்சுனா தெரிவித்துவிட்டு வைத்தியசாலையில் இருந்து வெளியேறினார்.

வெளியேறிச் சென்ற வைத்தியர் அர்ச்சுனாவை வைத்தியசாலைக்கு வெளியில் குழுமிய பொதுமக்கள் அவரைத் தோளில் தாங்கிச் சென்றனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ரஜீவ் தொடர்ந்தும் கடமையில் உள்ளார். வைத்தியசாலை பணிகள் சுமுகமாக இடம் பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

### ஜனாதிபதித் தேர்தலை...

கருத்துக் கணிப்புக்கு உட்படுத்தி நிறைவேற்றும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பு வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தால் இன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுன இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். இந்நிலையில் பிரதம நீதியரசர் தலைமையில் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் குறித்த மனு இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே மனு விசாரணையின்றியே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் வழக்கு கட்டணமாக 5 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும். எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்தக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

மனுவின் பிரதிவாதிகளாகத் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

### சுமூகமாக...

மத்திய அரசால் வழங்கப்பட்ட கடிதத்தின் உண்மைத்தன்மை தொடர்பில் தனக்குத் தெரியாது என்றும், தான் மத்திய அமைச்சிடம் நேரடியாகச் சென்று கேட்டபோது தனக்கு அந்தக் கடிதம் வழங்கப்படவில்லை என்றும் வைத்தியர் அர்ச்சுனா தெரிவித்தார். நான் அந்தக் கடிதத்தின் பிரதியை அவருக்கு வழங்கினேன். அவர் அதனைப் பார்வையிட்ட போதும் எடுத்துச் செல்லவில்லை.

அதன் பின் தொடர்ச்சியாக என்னைக் கடமையாற்றுமாறு கூறிவிட்டு வைத்தியர் அத்தியட்சகர் காரியாலயத்திலிருந்து வைத்தியர் அர்ச்சுனா வெளியேறினார்.

வைத்தியசாலைப் பணிகள் வழமை போல் சுமுகமாக நடைபெற்று வருகின்றன. எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் நோயாளிகள் தமக்கான சிகிச்சைகளைப் பெற்று வருகின்றார்கள். அதேபோல் வைத்தியர்களும், ஏனைய உத்தியோகத்தர்களும் தமது கடமையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

நாங்கள் தொடர்ச்சியாக வைத்தியசாலையினுடைய அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடி வருகின்றோம்.” – என்றார்.


Muhurtham Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிங்க(ள) அதிகாரி!

தமிழர் பிரதேசத்திற்கு தமிழ் அதிகாரிகளை - ஆளுநர்களை - நியமிப்பது குறித்து வலியுறுத்தியும் பேசியும் வருகின்றோம்.

இப்போதும் வெற்றிடமாகியுள்ள கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் பதவிகளுக்கு உரிய தரத்தில் தமிழர்களை நியமிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம். ஆளுநராக தமிழர்களே வடக்கு கிழக்குக்கு வர வேண்டும் என விரும்புகின்றோம்.

அது நியாயமான - நீதியான - கோரிக்கைதான். அப்படி வலியுறுத்துவதற்கு வலிமையான காரணங்களும் உண்டு.

ஆயினும் இனவாத நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வடக்குத் தமிழர்களின் மனதை வெல்லும் வகையில் இந்த மண்ணில் இருந்து அரும்பணியாற்றிய - மக்கள் மனதை வென்ற - ஒரு சில பெரும்பான்மையின அதிகாரிகளும் இங்கிருந்திருக்கின்றார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இலங்கையில் தமிழர்களின் விடுதலைப் போர் ஆயுத வழிக்குத் திரும்பி உச்சம் பெறத் தொடங்கிய சமயத்தில் - 1978 இல் - யாழ். மாவட்ட அரசு அதிபராக பதவியேற்றவர் லயனல் பெர்னாண்டோ. கடந்த வாரம்தான் அவர் மறைந்தார்.

யாழ் அரச அதிபராக இருந்த காலகட்டத்தில் தம்மை யாழ் மாவட்ட மக்களின் பாதுகாவலனாக முன் நிறுத்தினார். பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் ஏதேனும் இடத்தில் முறுகல் என்று அறிந்தால் அந்த நிமிடமே அவர் அங்கு விரைந்து வருவார். மக்கள் காவலனாக நிற்பார். சில சமயங்களில் வீட்டில் அணிந்திருந்த சாரத்துடனேயே அவர் சம்பவ இடத்தில் நிற்பார். அத்தகைய அவசரம் காட்டுவார்.

குறுகிய காலத்தில் - சுமார் ஒரு வருட சேவையில் - குடா நாட்டு மக்களின் நம்பிக்கையை அவர் வென்றெடுத்தார்.

அவரது தாயார் மறைந்த போது யாழ் நகர வர்த்தகர்கள் அனைவரும் தமது கடைகளை அரைநாள் பூட்டி, அந்த மனிதரைத் தந்த தாய்க்கு அஞ்சலி செலுத்தினர். யாழ்ப்பாணத்தில் நடந்த அந்த இறுதி நிகழ்வில் பெரும் திரளானோ பங்கு கொண்டனர்.

கடைசியில என்ன நடந்தது? மக்களின் செல்வாக்கை ஈட்டியமையால் அடுத்த வருடமே அவர் இடம் மாற்றம் செய்யப்பட்டார்.

''எந்தக் காரணங்களும் காட்டாமல் - வடக்கு எம்.பிக்களின் கடும் ஆட்சேபங்களுக்கு மத்தியில் - வேண்டும் என்றே அவர் இடமாற்றம் செய்யப்பட்டார். அதன் பின்னர் நடந்தவைதான் இலங்கையின் துன்பியல் நிகழ்வுகள்'' - என்று முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம வரைகின்றார்.

புலிகளுக்கு மத்தியில் லயனல் (சிங்கம்) வடக்குத் தமிழ் மக்களுக்காக உழைத்தது என்று ஒரு விமர்சகர் குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாணத்தில் அரச அதிபராக இருந்த சமயம் அடிக்கடி யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு வந்து அங்கு நூல்களுடன் ஒன்றிப்போகும் லயனல் பெர்னாண்டோ பின்னாளில் பொதுசன நூலகம் சிங்களக் காடையர்களால் எடுக்கப்பட்ட பின்னர், அதன் மொத்த நஷ்டங்களைக் கணக்கிட்டு ஆய்வு செய்வதற்கான குழுவின் தலைவராக சிங்கள அரசினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்வு இடம் பெற்றது.

பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தத் தமது செயலாளர் பாலபத்தபெண்டி தலைமையில் அனுப்பி வைத்த குழுவிலும் லயனல் பெர்னாண்டோ இருந்தார். அதில் அரசியல் ரீதியாக - சுயாதீனமாக - சுதந்திரமாக அவர் செயற்பட முடியவில்லை. ஆயினும் பேச்சுக்களில் பங்கு பற்றிய புலிகளுடனும் அவர்களின் தலைவர்களுடனும் அவர் தனிப்பட்ட நம்பிக்கையை வளர்த்திருந்தார்.

ஒன்பது நாள்களுக்கு முன்னர் காலமான அவரது நினைவு கடந்த மிலேனியத்தின் இறுதியில் வடபகுதி மக்கள் மனதில் மெச்சப்பட்டது.

அதேபோல 2015களில் வடக்கில் சுமார் ஒரு வருடம் ஆளுநராக இருந்த பளிககாராவும் வடக்கின் வரவேற்பு பெற்ற அதிகாரியாக இருந்தார். முதல்வர் விக்னேஸ்வரன் அவருடன் முரண்பட்டு அவரை கொச்சைத் தனமாக திட்டியமை அறிவார்ந்த செயலாகக் கற்றவர் சமூகத்தில் மதிக்கப்படவில்லை.

இப்படி சிங்கள நிர்வாகிகளும் இங்கு தமிழர்களினால் மெச்சப்படத் தக்கவர்களாக இருந்துதான் இருந்திருக்கிறார்கள்.




# தலங்காவற் பிள்ளையார் கோவில் சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு

திருநெல்வேலி, தலங்காவற் பிள்ளையார் கோவில், வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்ச்சி அண்மையில் இடம்பெற்றது.

மாணவர்களிடையே சமய அறிவையும் அதன் மூலம் ஒழுக்கநெறியையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோசவத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் சமய அறிவுப்போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

அதற்கான பரிசளிப்பு நிகழ்ச்சி அண்மையில் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

தரம் 3 தொடக்கம் 11 வரை பயிலுகின்ற 215 மாணவர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் தோற்றியிருந்தார்கள். இவர்களில் 152 பேர் பரிசுக்கு உரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப் பட்டன.

கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 3 பயிலும் செல்வி தீபிகா விஜே 100 புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். இப் பதக்கம் ஆண்டு தோறும் அமரர் சி. பொன்னுத்துரை, தாயார் அமரர் பொ. தங்கமாணிக்கம் ஆகியோர் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண் முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஆலய பிரதமகுரு விக்னராஜா சர்மா, மஹோற்சவகுரு ஞானானந்தகுருக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பரீட்சைக் குழு சார்பாக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் போ.ஐங்கரநேசன் , ஆனைப்பந்தி அமெரிக்கன் மிசன் பாடசாலை அதிபர் யோ.ஜெக ஆனந்தம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.










# தீகவாபி தூபியில் நினைவுச் சின்னங்கள் வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்பு

(பாறுக் ஷிஹான்)

வரலாற்றுச் சிறப்புமிக்க தீகவாபி தூபிக்குள் புனித தாது, பொக்கிஷங்கள் என்பவற்றை வைக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (14) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இலங்கையின் நான்காவது பெரிய தூபிகளில் ஒன்றான தீகவாபியை புனரமைக்கும் பணிகள் 2020 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்துக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் தீகவாபி தூபியில் புனித தாது வைக்கப்பட்டதோடு அந்த சமயத்தில் விமானப் படையினர் மலர் தூவி மலர் வணக்கம் செலுத்தினர்.

புனித தாது மற்றும் ஏனைய தாதுக்கள் வைக்கப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாது மண்டபம் மற்றும் அன்னதான மண்டபம் என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திறந்து வைத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன,

கிழக்கு மாகாணத்தின் பௌத்த





பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் கீழ் தீகவாபி தாது கோபுரம் மற்றும் முகுது மகா விகாரையை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

'தீகவாபி அருண நிதியம்' என்ற பெயரில் ஒரு நிதியத்தை நிறுவி நிதி சேகரிக்கப்பட்டது. தாது கோபுரம் 62.3 அடி உயரத்துக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்கியது. பக்தர்கள் வழங்கிய தாராளமான ஆதரவும் பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், மல்வத்து தரப்பு வணக்கத்துக்கு உரிய அங்கும்புரே பிரேமவன்ச தேரர், கிழக்கு மாகாண பிரதி பிரதான சங்க நாயக்க தேரர், ரஜமகா விகாராதிபதி வணக்கத்துக்குரிய மகா ஓயா சோபித தேரர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பௌத்த சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் டீ. வீரசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பணிக் குளாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முப்படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் தயா கமகே, தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் பேராசிரியர் துசித மெண்டிஸ் மற்றும் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.









# ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டு அலுவலகம் கொத்மலையில் திறப்பு

(ஆ.ரமேஸ்)

கொத்மலை பிரதேசத்துக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டு அலுவலகம் தவலந்தன்னை நகரில் நேற்றுக் (14) காலை திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியின் கொத்மலை பிரதேச தமிழ் அமைப்பாளராக அண்மையில் நியமனம் பெற்ற சண்முகம் திருச்செல்வம் தலைமையில் இந்த செயற்பாட்டு அலுவலகம் உத்தியோக பூர்வமாக மக்கள் பாவனைக்குத் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுனர் நவீன் திஸாநாயக்காவின் உத்தியோகபூர்வ செயலாளரும் கொத்மலை தேர்தல் தொகுதி அமைப்பாளருமான விஜயவர்தன தேவகெதர உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# செல்வம் அடைக்கலநாதனை மன்னாரில் சந்தித்தார் சஜித்!





எதிர்க் கட்சித் தலைவருக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருக்கும் இடையே விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெற்றுள்ளது.

பிரபஞ்சம்ஸ்மார்ட்வகுப்பறைகளைத் திறந்து வைக்கும் முகமாக மன்னார் மாவட்டத்துக்கு இன்று (15) விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஷ, தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனை மன்னார், கொன்வென்ட் வீதி, பெற்றாவில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.







# களுவாஞ்சிகுடி நகர் பகுதியில் போக்குவரத்து சமிக்ஞை விளக்கு

## பொருத்துவதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு!

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சி. சந்திரகாந்தனின் கருத்திட்டத்துக்கு அமைவாக 18 மில்லியன் செலவில் போக்குவரத்து சமிக்ஞை விளக்கு பொருத்துவதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு கட்சியின் களுவாஞ்சிக்குடி பிரதேச குழு தலைவர் சிவபாலன் சசிகரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பட்டிருப்பு தனித்தமிழ் தொகுதியில் எதிர்கால நகர மயமாக்கல் திட்டத்தின் அடிப்படையில் களுவாஞ்சிகுடி மற்றும் பட்டிருப்பு பிரதேசத்தை மையப்படுத்தி வீதிகள் வடிகான்கள் மற்றும் ஏனைய உட்கட்டுமான பணிகள் முதன்மை அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் களுவாஞ்சிக்குடி நகரின் மத்தியில் அமைந்துள்ள நாற்சந்தியில் போக்குவரத்துச் சமிக்கை விளக்குகள் பொருத்தும் பணியானது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சி. சந்திரகாந்தனின் அழைப்பையேற்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் இராஜாங்க அமைச்சர் இணைந்து ஆரம்பித்து வைத்திருந்தனர்.

இந்த நிகழ்வில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜீவானந்தம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சூரிய பண்டார, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமிந்த அத்துலுவகே, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சிவகுமார், மட்டக்களப்பு மாவட்ட பிரதம பொறியியலாளர் பரதன், நிறைவேற்று பொறியியலாளர் லிங்கேஸ்வரன், கட்சியின் பொதுச் செயலாளர் பூ. பிரசாந்தன், பிரதம பொருளாளர் ஆ.தேவராசா,தேசிய அமைப்பாளர் தஜீவரன், களுவாஞ்சிக்குடி கிராம தலைவர் கந்தவேல், பட்டிருப்பு கிராம தலைவர் குணபாலன், வர்த்தக சங்க தலைவர் அற்புதராசா உட்பட கட்சியின் தலைவர் பணிக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், பிரதேச மற்றும் கிராமிய குழு நிர்வாகிகள், கிராம மட்ட அமைப்புகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கதிர்காம பாத யாத்திரிகர் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சை வழங்கி வைப்பு!

(அபு அலா)

கதிர்காம பாத யாத்திரிகர்களின் நலன்கருதி நடத்தப்பட்ட இலவச ஆயுள்வேத மருத்துவ முகாமில் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்களுக்கு தேவையான மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டதாகபவும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பிரதி மாகாண ஆணையாளர் டாக்டர் எம்.ஏ.நபீல் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கதிர்காம பாத யாத்திரிகர்களின் நலன்கருதி ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ எனும் தொனிப்பொருளில் உகந்தை மற்றும் குமண போன்ற இடங்களில் கடந்த 01 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இந்த இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர். அவர்களின் உடல் உபாதைகளை நீக்கக் கூடிய மருந்துகள் மற்றும் உடல் வலிகளைப் போக்கும் ஆயுள்வேத மருந்துகளும், பாம் போன்ற பல மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டன. அதேவேளை தொற்றா நோய் மற்றும் தொற்றும் நோய் தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த தொழிலதிபர் ஏ.எம்.அப்துல் சலாமின் உதவியுடன் சுமார் 6000 பாத யாத்திரிகர்களின் தாக சாந்திக்கான குளிர்பானமும் வழங்கி வைக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் இணைந்து இதனை நடத்தின. இந்த இலவச மருத்துவ முகாமில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சேவையை வழங்கினர்.







# பாடசாலைக் கட்டடம் அமைப்பதற்கென 8 மில்லியன் ரூபா வழங்கிய தொழிலதிபர்

## கல்முனை அஸ்-ஸஹ்றா வித்தியாலயத்தின் பூரணப்படுத்தப்பட்ட இரண்டாம் மாடி கட்டடம் திறப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை அஸ்-ஸஹ்றா வித்தியாலயத்தின் பூரணப்படுத்தப்பட்ட இரண்டாம் மாடி கட்டடம் உத்தியோக பூர்வமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை (14) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சமூக சேவகரும் இளம் தொழிலதிபருமான ஈசம் முகாமைத்துவப் பணிப்பாளர் செல்லத்துரை முஹமட் றிப்னாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு 80 லட்சத்துக்கும் அதிகமான தனது தனிப்பட்ட செலவில் கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளார்.


இந்த நான்கு வகுப்பறைகளை கொண்டமைந்த புதிதாக பூரணப்படுத்தப்பட்ட கல்முனை அஸ்-ஸஹ்றா வித்தியாலயத்தின் இரண்டாம் மாடி கட்டடத்தை ஏனைய அதிதிகளுடன் இணைந்து திறந்து வைத்தார்.



இந்த நிகழ்வு கல்முனை அஸ்-ஸஹ்றா வித்தியாலய அதிபர் எம். எச். எஸ். ஆர். மஜீதிய்யா தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து பிரதம அதிதி மற்றும் ஏனைய அதிதிகளால் பாடசாலை அதிபருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. பிரதம அதிதிக்கு ஏனையவர்களால் பொன்னாடை போர்த் தப்பட்டு நினைவு சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.





# முன்னேஸ்வரம் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பம்!

(ரஸீன் ரஸ்மின்)

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னேஸ்வரநாத சுவாமி தேவஸ்தானத்தின் ஆவணி மகோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது என்று ஆலயத்தின் பிரதம குருவும், தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ ச.பத்மநாபக் குருக்கள் தெரிவித்தார்.

திருவிழா தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் விஷேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (14) மாலை ஆலயத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

சிலாபம் முன்னேஸ்வரம் கோயில் இலங்கையில் உள்ள ஐந்து பெரும் சிவாலயங்களில் (ஈசுவரங்களில்) ஒன்றாகும்.

இந்த நிலையில், முன்னேஸ்வரம் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 28 தினங்கள் உற்சவங்கள் மற்றும் விஷேட பூஜைகள் உட்பட திருவிழாக்கள் நடைபெறும்.

இந்தத் திருவிழாவில் அனைத்து அடியார்களும் வருகை தந்து இறைவனுடைய திருவருளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதன் அடிப்படையில், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு விநாயகர் உற்சவமும், 12 ஆம் திகதி 4.30 மணிக்குச் சுப்ரமணிய உற்சவமும், 13 ஆம் திகதி 4.30 மணிக்கு மஹா விஷ்ணு உற்சவமும், 14 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு தீ மிதிப்பு உற்சவமும் நடைபெறும்.

ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பிஷாடனர் உற்சவமும், 16 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நடேசர் உற்சவமும், 17 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், 19 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

அத்துடன், ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி மாலை 4 மணிக்கு பூங்காவனம், சண்டேஸ்வரர் பூஜை, வைரவர் மடை போன்ற நிகழ்வுடன் உற்சவம் நிறைவு பெறும். இதேவேளை, திருவிழாவுக்குப் பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னேஸ்வரம் ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் நலன் கருதி விசேட உள்ளுர் பஸ் சேவைகளும் இடம்பெறவுள்ளன. இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரயில்வே திணைக்களமும் பக்கதர்களின் போக்குவரத்துக்காக ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளன.

அத்தோடு, திருவிழாக்கு வருகை தரும் பக்தர்களின் வாகனங்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு விஷேடமாக வாகன தரிப்பிடமும் அமைக்கப்படவுள்ளன. பக்கதர்களின் பாதுகாப்பு நலன் கருதி ஆலயத்தை சுற்றி பொலிஸாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

சிலாபம் பிரதேச செயலகம், மாதம்பை பிரதேச சபை உட்பட அரச அலுவலகங்கள் ஒன்றிணைந்து இந்த உற்சவத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்கான சகல சேவைகளையும் வழங்குவதற்காக கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன.

இங்கு வரும் அனைத்து பக்தர்களும் இயற்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் என்பனவற்றின் பாவனைகளை தவிர்த்து இயற்கைக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும்.

எனவே, இந்தத் திருவிழாவைச் சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்கள் முழுமையான ஒத்துழைப்பிக்களை வழங்க வேண்டும்.- என்றார்.







# புதிய தொழில்நுட்பத்துடன் மேற்கொண்ட நெற்செய்கையின் அறுவடை நிகழ்வு

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை விவசாய விரிவாக்கல் நிலையத்துக்கு உட்பட்ட மாவடி முன்மாரி கிராமத்தில் புதிய தொழில் நுட்பங்களுடன் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் அறுவடை விழா நேற்று இடம்பெற்றது.





மாவடிமுன்மாரி விவசாய போதனாசிரியர் பிரிவிற்கு பொறுப்பான தொழில் நுட்ப உத்தியோகத்தர் துஷாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன் பாடவிதான உத்தியோகத்தர்களான லாவண்யா செந்தீபன், லக்ஷ்மன், இளமாறன், தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத் தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பரசூட் முறை, இயந்திர நாற்று நடுகை மற்றும் வீசி விதைத்தல் ஆகிய மூன்று முறைகளிலும் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை அறுவடையின் பின் பயிர்வெட்டு அளவீடு செய்யப்பட்டது. வீசிவிதைத்தலை விடவும் ஏனைய இரு முறைகளிலும் அதிக விளைச்சல் கிடைத்ததோடு உற்பத்தி செலவும் குறைவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரனின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் இவ்வாறான முன் மாதிரி துண்டச் செய்கைகள் செய்கை பண்ணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# பெருவிளையாட்டுப் போட்டிகளில் கோரக்கர் தமிழ் ம. வி. சாம்பியன்

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய விளையாட்டு போட்டியின் பெருவிளையாட்டு போட்டிகளில் கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் முதலிடம் பெற்று சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

நான்கு போட்டிகளில் சாம்பியனும் ஒரு போட்டியில் ரன்னஸ்அப் இடத்தையும் பெற்று வெற்றி வாகை சூடியது.


பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கே .எல்.எம். ஸகி அனைத்து போட்டிகளுக்குமான பயிற்சியை வழங்கியிருந்தார்.

இதற்கான வெற்றிக் கிண்ணம் கடந்த வாரம் நடைபெற்ற வலய விளையாட்டு விழாவில் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் வித்தியாலய அதிபர் எஸ். இளங்கோபனிடம் வழங்கி வைத்தார்.

கரப்பந்தாட்டம் 16 வயதுக்கு உட்பட்ட மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கானத போட்டியில் முதலிடத்தையும் 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியிலே ரன்னஸ்அப் இடத்தையும் மற்றும் உதைபந்தாட்ட போட்டியில் 17 மற்றும் 20 இற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் முதலிடம் பெற்றது.

இதனை விட மாகாண மட்ட போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாகாணமட்ட போட்டிகளுக்கு மேசைப் பந்தாட்டம் 16 வயது ஆண், பெண் மற்றும் இருபது வயது ஆண் ரக்பி என்பன மாகாணமட்ட போட்டிகளில் பங்கு பற்றவுள்ளன.

பயிற்றுவிப்பாளர் ஸகி மற்றும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் நன்றிகளையும் தெரிவிப்பதாக அதிபர் இளங்கோபன் தெரிவித்தார்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வு!

(எம் .எப்.நவாஸ்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி கட்டுறு பயிலுனர் ஆசிரியர்களுக்கான நிகழ்வு இன்று (15) கல்லூரியின் கேட்போர் கூடத்தில் பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தியின் ஒருங்கிணைப்பில் அம்பாறை மாவட்ட உளச்சமூக உத்தியோகத்தர் யூ எல். அஷாருடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். ஜெகராஜன் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக உப பீடாதிபதிகளான எம் சி. ஜுனைட், எம். ஐ. ஜௌபர் மற்றும் ஏ. ஜீ. அஹமட் நாஸீர், அம்பாறை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் தம்மிகா குலதுங்க, பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களான எஸ். சியாத், எஸ். ஜெகநாதன் மற்றும் விரிவுரையாளர்கள், கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது வளவாளர்களாக அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ. எல். எம். றிபாஸ் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். ஐ.வாஹிட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் இரு மீனவர்களை நான்கு தினங்களாக காணவில்லையாம்!

(எம்.ஏ.றமீஸ்)

கடற்றொழிலுக்குச் சென்ற அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் நான்கு தினங்களாகியும் இதுவரை கரைக்கு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போன இரு மீனவர்களும் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில், அட்டாளைச்சேனை கப்பலடி கடற்கரை பிரதேசத்தில் இருந்து கடற்றொழிலுக்காக சென்றுள்ளனர்.

இவர்கள் மறுநாள் சனிக்கிழமை காலை கடற்பகுதியிலிருந்து கரைக்கு திரும்பியிருக்க வேண்டும். ஆனால் மூன்று தினங்களாகியும் இதுவரை இந்த மீனவர்கள் கரைசேராமையால் இவர்களைத் தேடும் பணி மூன்று தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அட்டாளைச்சேனை மற்றும் சின்னப்பாலமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரும் கடற்றொழிலை நீண்ட காலமாக மேற்கொண்டு வருபவர்கள் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

சின்னப்பாலமுனை-02 ஐச் சேர்ந்த ஐ.எல்.இர்பான் (வயது - 40) என்னும் மூன்று பிள்ளைகளின் தந்தையும்,





அட்டாளைச்சேனை-06 ஆம் பிரிவைச் சேர்ந்த கே.ஆர்.எம்.நிஸ்பர் (வயது – 24) என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தையும் இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

ஒரு இரவுப் பொழுதில் கடலில் தரித்து நின்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு மறுநாள் காலை வேளையில் திரும்புகின்ற வழக்கத்தை இவர்கள் கொண்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளையில் இந்த மீனவர்கள் ஆழ்கடலில் இருந்தவாறு தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு உரையாடியுள்ளனர்.அதன் பின்னர் இவர்களது தொலைபேசி அழைப்பு செயலிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீனவர்கள் உரிய வேளைக்கு கரைசேராமல் இருந்த விடயத்தை அறிந்த உறவினரும், நண்பர்களும் இவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸார், கடற்படையினர், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் மற்றும் துறைசார் தரப்பினிடமும் இவ்விடயம் தொடர்பில் அறியப்படுத்தி இம்மீனவர்களை தேடும் முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# கல்லரிப்பு பழங்குடி மாணவருக்கு கல்வி வழங்க வாகனம் ஏற்பாடு!

(வி.ரி.சகாதேவராஜா)

வாகரை பிரதேசத்தில் உள்ள வெருகல் கல்லரிப்பு பழங்குடிக் கிராம மாணவர்களுக்குக் கல்வி வசதி வழங்க வள்ளுவம் அமைப்பு முன்வந்துள்ளது.

கல்லரிப்பு பழங்குடி கிராமத்தில் பாடசாலை இல்லை. மூன்று கிலோ மீற்றர் தொலைவில் மாவடிச்சேனை மற்றும் வெருகல் பாடசாலைகள் உள்ளன. இந்த மாணவர்கள் அங்கு சென்றுதான் கல்வி பயில வேண்டிய நிலை உள்ளது.

அதனால் அங்குள்ள மாணவர்கள் மாதக்கணக்கில் பாடசாலைக்குச் செல்லாமல் இருந்து வந்தனர்.

இந்த நிலையை உணர்ந்த வள்ளுவம் அமைப்பு தினமும் காலையில் அந்த மாணவர்களை மாவடிச்சேனை பாடசாலைக்கு கொண்டு செல்ல வாகன வசதியை வழங்கி உள்ளது. அதே போன்று பாடசாலை முடிந்ததும் அவர்களை கிராமத்தில் கொண்டு செல்லவும் அந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல மாத காலமாக பாடசாலைக்குச் செல்லாதிருந்த அந்த மாணவர்களுக்கு வள்ளுவம் அமைப்பு ஏற்படுத்தி கொடுத்த இந்த வாகன வசதி பெரும் உதவியாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக கிராம மக்கள் வள்ளுவம் அமைப்புக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.





# நியமன எம்.பி.க்கள் 4 பேரின் பதவிக்காலம் நிறைவு மாநிலங்களவையில் பா.ஜ.கவின் பலம் குறைந்தது!

மாநிலங்களவையின் நியமன எம்.பி.க்களான ராகேஷ் சின்ஹா, ராம் சகல், சோனல் மன்சிங், மகேஷ் ஜெத்மலானி ஆகிய 4 பேரின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்தது. நான்கு பேரும் ஓய்வு பெற்றதை யடுத்து, மாநிலங்களவையில் பா.ஜ.க.வின் பலம் 86 ஆக குறைந்துள்ளது. அத்துடன் மாநிலங்களவையில் தேசிய ஜனநாயக கூட்டணியின் பலம் 101 ஆக உள்ளது.

மாநிலங்களவையின் தற்போதுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகும். 20 உறுப்பினர் இடங்கள் காலியாக உள்ளன. தற்போதைய நிலவரப்படி, பெரும்பான்மைக்கு 113 உறுப்பினர்கள் தேவை என்ற நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அந்த எண்ணிக்கை இல்லை. எனவே, மாநிலங்களவையில் மசோதாக்களை நிறைவேற்ற, முன்னாள் கூட்டணி கட்சிகளான அ.தி.மு.க., ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் மற்றும் கூட்டணியில் இல்லாத பிற கட்சிகளை அரசு நம்பி உள்ளது.

மாநிலங்களவையில் இந்தியா கூட்டணியின் பலம் 87 ஆக உள்ளது. காங்கிரசுக்கு 26 உறுப்பினர்களும், திரிணாமுல் காங்கிரசுக்கு 13 உறுப்பினர்களும் உள்ளனர். ஆம் ஆத்மி கட்சி, தி.மு.க. தலா 10 உறுப்பினர்களை கொண்டுள்ளன.

எனினும் காலியாக உள்ள இடங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டால் பா.ஜ.க.வுக்கு கூடுதலாக 9 உறுப்பினர்கள் கிடைக்கலாம். அத்துடன், நியமன எம்.பி.க்கள் மற்றும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆதரவு அளித்தால் பா.ஜ.க. கூட்டணி மெஜாரிட்டியை தாண்டிவிடும்.

அதேசமயம், ஜம்மு காஷ்மீர், தெலுங்கானாவில் தேர்தல் நடத்தும் போது காங்கிரசுக்கு கூடுதல் இடங்கள் கிடைக்கும். இதன்மூலம், மாநிலங்களவையில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை அது கோர முடியும்.

# சம்பளம் தராத ஐடி நிறுவன முதலாளியை நள்ளிரவில் தாக்கிக் கடத்திய ஊழியர்கள்

## ஹைதராபாத்தில் அதிர்ச்சிச் சம்பவம்

கிக்லீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பணிபுரியும் 1200 ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல் இருந்துள்ளது. இந்த நிலையில் அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி நள்ளிரவில் மர்மநபர்களால் கடத்தப்பட்டிருக்கின்றார்.

தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் இயங்கி வரும் ஐ.டி. நிறுவனமான கிக்லீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ரவிச்சந்திரா ரெட்டி ஜூலை 10 ஆம் திகதி மர்மநபர்களால் கடத்தப்பட்டார்.

ரவிச்சந்திராவின் வீட்டிற்கு நடு இரவில் வந்த மர்மநபர்கள் அவரையும் அவரது தாயாரையும் தாக்கியுள்ளனர். பின்னர் ரவிச்சந்திராவை அந்தக் கும்பல் கடத்தி சென்றனர். மேலும் அவரது வீட்டில் இருந்த 83 மடிக்கணினிகளையும் அந்தக் கும்பல் திருடி



சென்றுள்ளது.


இது தொடர்பாக ரவிசந்திராவின் தாயார் காவல்நிலையத்தில் முறைப்பாடு அளித்தார். இதனையடுத்து, ரவிச்சந்திராவை பொலிஸார் தீவிரமாகத் தேடி வந்தனர்.

இந்நிலையில், 4 நாள்களுக்கு பின்பு பொலிஸார் ரவிச்சந்திராவை ஸ்ரீசைலம் நெடுஞ்சாலையில் உள்ள ஒரு ஹோட்டலில் கண்டுபிடித்து மீட்டனர்.

இந்த விவகாரம் தொடர்பாக 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அதில், ரவிச்சந்திரா சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியாக உள்ள கிக்லீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் 5 ஊழியர்களும் அடங்குவர் என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 84 மடிக்கணினிகள், 6 கார்கள், 5 தொலைப்பேசிகள் மற்றும் 3 பாஸ்போர்ட்டுகள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பவற்றைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

நிதி சிக்கல் காரணமாக அவரது கிக்லீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பணிபுரியும் 1200 ஊழியர்களுக்கு சில மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமல் இருந்துள்ளது. இதனால் கோபமடைந்த சில ஊழியர்கள் தான் ரவிச்சந்திராவை திட்டம் போட்டு கடத்தியுள்ளனர் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.



# டிரம்ப்பைச் சுட்டவர் குறித்து எவ்.பி.ஐ. விசாரணை தீவிரம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட தோமஸ் மத்தியுஸ் குருக்ஸ் (வயது 20) உளரீதியாக பாதிக் கப்படாதவர் என எவ்.பி.ஐ. தெரிவித் துள்ளது.

துப்பாக்கி சூடு நடத்திய தோமஸ் மெத்யூ க்ருக்ஸ்-ஐ பாதுகாவலர்கள் சம்பவ இடத்தில் வைத்தே சுட்டுக் கொன்றனர். அதேசமயம் டிரம்ப் மீதான இந்தத் தாக்குதல் உலக அள வில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யிருந்தது.

சந்தேகநபர் உளரீதியான பாதிப் பிற்குள்ளானவர் என்பதற்கான அறி குறிகள் எதுவுமில்லை என தெரிவித் துள்ள எவ்.பி.ஐ. அதிகாரியொருவர், அவரது நோக்கம் குறித்தே கவனம் செலுத்துகின்றோம், குறிப்பாக சமூக ஊடகங்களில் அவரது பதிவுகளை ஆராய்ந்து வருகிறோம் எனத் தெரி வித்துள்ளார்.

எனினும் இதுவரை ஆபத்தான அச்சுறுத்தலான விடயங்கள் எதனை யும் காணமுடியவில்லை. விசாரணை கள் ஆரம்பகட்டத்திலேயே உள்ளன எனவும் கூறினார். சந்தேக நபரது கையடக்க தொலைபேசியை ஆராய் கின்றோம். அதனை எவ்.பி.ஐயின் ஆய்வு கூடத்திற்கு அனுப்பியுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

டொனால்ட் டிரம்ப் மீதான துப் பாக்கி பிரயோகத்திற்கு கொள்கை ரீதியான காரணங்கள் எதுவும் இருப் பதந் தெரியவில்லை. அவர் தனித் துச் செயற்பட்டுள்ளார் போல தோன் றுவதாகவும் எவ்.பி.ஐ. தெரிவித் துள்ளது.

அதேசமயம் சந்தேகநபர் கடந்த காலங்களில் எங்களின் கண் காணிப் புகளின் கீழ் இருக்கவில்லை, எங்கள் தரவுகளில் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் எவ்.பி.ஐ. தெரிவித்துள்ளது.

அவருக்கு எப்படி துப்பாக்கி கிடைத் தது என விசாரணைகளை மேற் கொண்டவேளை அவர் தனது தந்தை கொள்வனவு செய்த துப்பாக்கியை பயன்படுத்தியுள்ளமை என்பது தெரிய வந்துள்ளதாக எவ்.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் அவரு டைய வாகனத்தில் சில வெடிபொருள் கள் காணப்பட்டன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பென்சில்வேனியா வில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டபோது அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.




# ஒரே இரவில் உலகம் முழுதும் பிரபலமான டிரம்பின் படம்!

தேர்தல் கூட்டத்தின் போது துப் பாக்கிச்சூட்டிற்கு இலக்கான அமெ ரிக்கா முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அச்சமயம் தனது ஒரு கையை உயர்த்திய புகைப்படம் ஒரே இரவில் உலகம் முழுவதும் பிரபல மானது.

அமெரிக்காவில் ஜனாதிபதி தேர் தல் இடம்பெறாவுள்ள நிலையில், பென்சில்வேனியா தேர்தல் கூட்டத் தில் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலுக்கு ள்ளாகி, காதில் காயம் ஏற்பட்டு , ரத்தம் வழிந்து, பாதுகாப்புப் படையின ரால் சூழப்பட்ட நிலையில், டிரம்ப் தனது ஒரு கையை உயர்த்தி காண் பித்திருந்தார்.

அந்த புகைப்படம் அச்சிடப்பட்ட ஆடைகள் (டி-சர்ட் ) தற்போது விற்ப னைக்கு வந்துள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்த ஆடைகளை ஒன்லைனில் ஆர்டர் செய்து வாங்கலாம் என்றும் கூறப் படுகிறது.





“இப்போது நான் பலமாக இருக்கி றேன்”, “நான் தோட் டாக்களுக்கு அஞ் சமாட்டேன்”, “தோல்வியை ஏற்க மாட்டேன்” என டிரம்பின் சில வார்த்தைகளும் அந்த ஆடைகளில் அச்சிடப்பட்டுள்ளது .

கனடா முரசு
பக்கங்கள் - 7
திங்கட்கிழமை 15/07/2024

## சர்ரே விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரேயில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இரண்டு வாகனங்கள் மோதியதில் ஒருவர் கொல்லப்பட்டார் என றோயல் கனடியன் பொலிஸ் (RCMP ) கூறுகிறது.

C2▶



# கனடாவில் புலம்பெயர்ந்தோர் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் உச்சத்தில்

கனடாவில் கடந்த ஒரு தசாப்தமாக புலம்பெயர்ந்தோர் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் உச்சத்தை எட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கனடாவில் நிரந்தர வதிவிட அந்தஸ்து பெறும் புலம்பெயர்ந்தோர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளவர்கள் இந்தியர்கள். கனடாவில் தற்போது நிலவும் வேலையின்மை நெருக்கடியில் சிக்கி அவர்கள் தவித்து வருகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளில், சிறந்த வாழ்க்கையை எதிர்பார்த்து கனடாவிற்குப் குடிபெயர்ந்த இந்தியர்களையும் அங்குள்ள புலம்பெயர்ந்தோரையும் வேலையின்மை கடுமையாக வாட்டிவதைத்து வருகிறது.

Globe and Mail report-இன் சமீபத்திய அறிக்கையின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளாக (ஜூன் 2024 வரை) கனடாவில் இருக்கும் புலம்பெயர்ந்தோர் மத்தியில் வேலையின்மை விகிதம் 12.6 சதவீதமாக உள்ளது.

அதே நேரத்தில் இந்தியாவிலிருந்து குடியேறியவர்களிடையேவேலையின்மை விகிதம் 30 சதவீதத்தை எட்டியுள்ளது.

2023-இல், கனடாவின் 471,810 புதிய நிரந்தர குடியிருப்பாளர்களில், இந்தியர்கள் மட்டும் 139,785 பேர். அதாவது கிட்டத்தட்ட 30 சதவீதம் ஆகும்.

# றொறன்ரோவில் நீர்க் கட்டண அறவீட்டில் சிக்கல்? ஒரு லட்சத்து 41 ஆயிரம் நீர்மானிகள் செயலிழப்பு




கனடாவின் றொறன்ரோ நகரின் நீர் கட்டண அறவீட்டில் சிக்கல்நிலை உருவாகியுள்ளது.

நீர் மானிகளில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக இவ்வாறு கட்டண அறவீட்டை உரிய முறையில் மேற்கொள்ள முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நகரின் சுமார் ஒரு லட்சத்து 41 ஆயிரம் நீர்மானிகள் செயலிழந்து உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கட்டணத்தை கணக்கிட்டு அறவீடு செய்ய முடியாது உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொழில்நுட்ப கோளாறு காரணமாக சில வாடிக்கையாளர்கள்இரண்டுஅல்லதுமூன்று மடங்கு தொகையை

C2▶




# ஒஷாவாவில் துப்பாக்கிச் சூட்டில் இருவர் பரிதாபமாக உயிரிழப்பு!

கனடாவில் டர்ஹாம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12.30 மணி அளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கனடாவின் ஒஷாவாவின் ஜேன் அவென்யூ மற்றும் கிளென்பொரெஸ்ட் வீதிகளுக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் டர்ஹாம் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 30 வயதான ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட நபர் கொலையுண்டவர்களுக்கு நன்கு அறிமுகமானவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ரொறன்ரோவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டணமாகச் செலுத்த நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு தசாப்த காலமாக நகராட்சி நிர்வாகம் சுமார் ஐந்து லட்சம் நீர்மானிகளை வீடுகளில் பொருத்தியுள்ளது.

இவை தானியங்கி அடிப்படையில் செயல் படக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

வீடுகளுக்கு ஒருவர் சென்று நீர்மானியை வாசித்துக் கட்டணத்தை கணக்கீடு செய்வதனைத் தவிர்க்கும் நோக்கில் தானியங்கி மானிகள் பொருத்தப்பட்டுள்ளன.

எனினும் கடந்த குளிர்காலத்தில் அதிக எண்ணிக்கையிலான நீர்மானிகள் தொழில்நுட்பக் கோளாறுக்கு உள்ளாகியுள்ளன.

இந்த நீர்மானிகளின் ஏற்பட்ட கோளாறு காரணமாக வாடிக்கையாளர்கள் கூடுதல் தொகையை செலுத்த நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்மானிகளை மாற்றீடு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சுமார் 7,200 வீடுகளுக்கு கடந்த இரண்டு மாதங்களாக நீர்க் கட்டணத்துக்கான பட்டியல்கள் அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சர்ரே விபத்தில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4:40க்கு முன்னதாக 144 தெரு மற்றும் 62 அவென்யூ சந்திப்பில் விபத்து நடந்ததாகப் பொலிஸ் கூறுகிறது.

விபத்தின் புகைப்படங்கள் சாலையில் குறிப்பிடத்தக்க சேதத்துடன் இரண்டு செடான் வாகனங்களைக் காட்டுகின்றன.

உயிர் காக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4:40 மணியளவில் இந்த விபத்து குறித்து தங்களுக்கு தகவல் கிடைத்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

அவர்கள் ஓர் அறிக்கையில் விபத்துக்கான சரியான காரணத்தை வழங்கவில்லை, ஆனால் புலனாய்வாளர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை சரியான காரணத்தை ஆராய்ந்து வருகின்றனர் எனவும் கூறினர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 63யு அவென்யூ மற்றும் 61யு அவென்யூ இடையே 144 தெரு மூடப்பட்டது. ஓட்டுநர்கள் “குறிப்பிடத்தக்க தாமதங்களை” எதிர்பார்க்கலாம் என்று பொலிஸார் எச்சரித்தனர்.

டேஷ்கேம் வீடியோ உட்பட விபத்து குறித்த கூடுதல் தகவல் தெரிந்தவர்கள் 604-599-0502 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.









# கல்கரி ஸ்டாம்பீட் - நெரிசல் நிகழ்வு ஒரு தசாப்த கால உச்சத்துடன் முடிவு

கால்கரி ஸ்டாம்பீட் – நெரிசல் நிகழ்வு ஒரு தசாப்தத்திற்கும் மேலாக அதன் அனைத்து நேர வருகைப் பதிவை நிறைவு செய்துள்கது.

பூமியின் மிகப் பெரிய வெளிப்புறக் காட்சிகளைக் கொண்ட இந்த நிகழ்வின் பார்வையாளர்கள் எண்ணிக்கையை ஒன்பது நாள்களுக்குப் பிறகு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒரு பத்திரிகையாளர் சந்திப்பின் போது, அதிகாரிகள் அறிவித்தனர்.

ஸ்டாம்பேட் நெரிசல் நிகழ்வின் மைதானம் 13 லட்சத்து 31 ஆயிரத்து 280 விருந்தினர்களை நெரிசல் களத்திற்கு வரவேற்றுள்ளது.

2012 ஆம் ஆண்டில், அதன் நூற்றாண்டு விழாவின் போது 14 லட்சத்தி 09 ஆயிரத்து 371 பேர் கலந்து கொண்டதால், இதுவரை இல்லாத அளவுக்கு நெரிசலான மக்கள் கூட்டம் பின்னுக்குத் தள்ளப்பட்டது.



CLICK HERE VIDEO







# கனடாவின் பாதுகாப்புச் செலவினம் 2032 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 வீதமாகும்!

## நேட்டோ எதிர்பார்ப்பு அப்போது நிறைவடையும் எனத் தகவல்

கனடாவின் பாதுகாப்புச் செலவுகள் உயர்த்தப்பட உள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 2032 ஆம் ஆண்டு பாதுகாப்பு செலவுகளுக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 வீதம் ஒதுக்கீடு செய்யப்படும் என பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேயர் தெரிவித்துள்ளார்.

நேட்டோ அமைப்பின் நாடுகள் இவ்வாறு பாதுகாப்புச் செலவில் இரண்டு வீதத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் நேட்டோவில் அங்கம் வகிக்கும் கனடா இதுவரையில் இவ்வாறான ஒரு தொகையை ஒதுக்கீடு செய்யவில்லை.

இவ்வாறான ஒரு பின்னணியில் எதிர்வரும் 2032 ஆம் ஆண்டில் பாதுகாப்பு செலவுகளுக்காக மொத்த தேசிய உற்பத்தியில் இரண்டு வீதம் ஒதுக்கீடு செய்யப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் பாதுகாப்பு செலவினங்களுக்காக இவ்வாறு இரண்டு வீதம் ஒதுக்கீடு செய்வதானது மொத்தமாக 60 பில்லியன் டாலர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

நடைமுறை சாத்தியப்பாடு உடைய வகையில் இந்த செலவீனங்கள் திட்டமிட்டு அமல்படுத்தப்படும் என பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேயர் தெரிவித்துள்ளார்.



# போதைப்பொருள் பயன்படுத்தும் விசேட நிலையங்கள் கொன்சவேடிவ் கட்சி ஆட்சிக்கு வந்ததுமே மூடப்படும்!

## கனடிய எதிர்க்கட்சித் தலைவர் பியே பொலியேவ் முற்கூட்டியே எச்சரிக்கை

கொன்சவேடிவ் கட்சியின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் போதைப் பொருள் பயன்படுத்துவதற்கான விசேட நிலையங்கள் மூடப்படும் என கனடிய எதிர்க்கட்சித் தலைவர் பியே பொலியேவ் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புடன் கூடிய இந்த நிலையங்கள் அவசியமற்றவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் முதல்வர் இந்த போதைப் பொருள் பயன்பாட்டு நிலையத்தின் அவசியம் குறித்து அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும் கொன்சவேடிவ் கட்சியின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் இவ்வாறான நிலையங்களுக்கு வழங்கப்படும் நிதி இடைநிறுத்தப்படும் என பொலியேவ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விளையாட்டு மைதானங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அருகாமையில் இவ்வாறான நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தால் அவை உடனடியாக மூடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பயன்பாட்டுக்கு அடிமையானவர்கள் பாதுகாப்பான வகையில் போதைப்பொருளை பயன்படுத்தக் கூடிய வகையில் இந்த நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஆனால் இந்த நிலையங்கள் போதைப்பொருள் பயன்பாட்டை ஊக்குவிக்கும் எனப் பொலியேவ் தெரிவித்துள்ளார்.

இதற்காக மக்களின் வரிப்பணத்தை செலவிடுவது பொருத்தமானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# பிரிட்டிஷ் கொலம்பியா பிரதேசத்தில் மின்னலினால் உருவாகும் காட்டுத் தீ!

## ‘முகாம் தீ’ நிகழ்வுகளுக்கும் அங்கு தடை

CLICK HERE VIDEO

பிரிட்டிஷ் கொலம்பியா பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் குறைந்தபட்சம் ஐந்து புதிய இடங்களில் காட்டுத்தீகள் மின்னலால் பற்றவைக்கப்பட்டுள்ளன. மேலும் சுமார் ஒரு டஜன் புதிய தீப்பிழம்புகளுடன் இணைந்து, மாகாணம் முழுவதும் எரியும் மொத்தக் காட்டுத் தீக்களின் எண்ணிக்கை இப்போது 150 க்கும் அதிகமாக உள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா காட்டுத் தீச் சேவை நேற்று முன்தினம் சனிக்கிழமை சமூக ஊடகங்களில் மின்னலால் எவ்வாறு தீப்பிடித்தது என்பது பற்றியும் லில்லூட் தீ மண்டலத்தில் தீ கண்டுபிடிக்கப்பட்டமை குறித்துக் என்பதை விவரித்தது. அத்துடன் வெப்பமான வானிலை மற்றும் காற்று காரணமாக மேலும் தீ பரவக்கூடும் என்று அது எச்சரித்தது.

“ஒற்றை மரம் எரிகின்றது“ என விவரிக்கப்படும் தீவிபத்துகளை உள்ளடக்கிய மண்டலத்தில் எந்த புதிய தீயினாலும் எந்த கட்டமைப்புகளும் ஆபத்தில் இல்லை என்றும் அது கூறியது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி நிலைவரப்படி, முந்திய நாளில் மட்டும் 10 தீ விபத்துகள் ஏற்பட்டன காட்டுத்தீ சேவை கூறுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவிக் இப்போதும் எரிந்து கொண்டிருக்கும் 77 சதவீதத்திற்கும் அதிகமான தீக்கள் மின்னல் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றன.

முகாம்கள் அமைக்கப்படும் இடங்களில் சுவாலையை ஏற்படுத்தும் “காம்ப்ஃபயர்” நிகழ்வுக்குத் தடை விதிப்பது பிரிட்டிஷ் கொலம்பியாவிக் வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வந்தது. இது ஹைடா குவாய் தவிர மற்ற முழு மாகாணத்தையும் உள்ளடக்கியதாகும்.

காலநிலை மாற்றத்தால் சூழல் வெப்பமடைந்து காட்டுத்தீயால் மாகாணத்தின் பகுதிகள் பாதிக்கப்படும் ஆபத்துக் குறித்து நகர மேயர் விளிம்பில் அஞ்சிக் கொண்டிருந்த சமயத்தில் – பிரிட்டிஷ் கொலம்பியாவின் பிரபலமான நனைமோ பூங்காவில் இளைஞர்கள் பட்டாசு வெடித்ததால் ஏற்பட்ட தூறிகை தீ பரவிய வேளையில் – இந்தத் தடை நடைமுறைக்கு வந்தது.

பைபர்ஸ் லகூன் பூங்காவில் இளைஞர்கள் குழு ஒன்று கூடி தீயை உண்டாக்கியமை, இவ் விடயங்களில் குடிமக்களும் அவதானம் கொண்டு தீத் தடைகளில் கவனம் செலுத்த ஒரு விழிப்புணர்வைத் தந்துள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.



# கல்விக்கு என புகழ்பூத்த கனடியப் பல்கலைகள்!

உலக அளவில் கல்வியில் சிறந்துவிளங்கும் நாடுகளில் 4 ஆம் இடத்தில் உள்ளது கனடா. பொதுவாக இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆப்பிரிக்க நாடுகளின் மாணவர்களும் உயர்தர கல்விக்கு கனடாவையே தெரிவு செய்கின்றனர்.

கனடா முழுவதும் பெரும்பாலான இடங்களில் ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு ஆகிய இரு மொழிகளிலும் கற்பிக்கப்படுகிறது. மேலும் கனடாவில் அதிக எண்ணிக்கையிலான பல்கலைக்கழகங்களும் அமைந்துள்ளன. அவை அனைத்தும் பொது நிதியுதவி பெற்றவை.

2024ல் வெளியான தரவுகளின் அடிப்படையில் கனடா முழுவதும் 100க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தனியார் பல்கலைக்கழகங்களும் செயல்பட்டு வருகின்றன.

95 சதவிகித பல்கலைக்கழகங்களில் தங்கும் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போதைய தரவுகளின் அடிப்படையில் கனடாவின் புகழ்பூத்த பலகலைக்கழகங்கள் மற்றும் அதன் சிறப்புகள் தொகுக்கப்பட்டுள்ளது.

## University Of Ottawa

கனடாவின் சிறந்த 10 பல்கலைக்கழகங்களில் 10 ஆவது இடத்தில் ஒட்டாவா பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளது. உலக அளவில் 203 ஆவது இடத்தில் இருக்கும் ஒட்டாவா பல்கலைக்கழகம், 2024 இல் வெளியான தரவுகளின் அடிப்படையில் 10 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இங்கு பணியாற்றும் வெளிநாட்டு ஆசிரியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கனடாவிலேயே 12 ஆவது இடத்தில் உள்ளது.

## McMaster University

9வது இடத்தில். உலக அளவில் 189 ஆவது இடத்தில் உள்ள மெக்மாஸ்டர் பல்கலைக்கழகம், வெளிநாட்டு ஆசிரியர்கள் தரவரிசையில் கனடாவிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் 93 ஆவது இடத்தில் உள்ளது.

ஒன்ராறியோவின் ஹாமில்டனில் அமைந்துள்ள



இந்தப் பல்கலைக்கழகம் மதிப்புமிக்க மருத்துவக் கல்விக்கு மிகவும் பிரபலமானதாகும்.

## University Of Calgary

கனடாவில் 8 ஆவது இடத்தில் தெரிவாகியுள்ளது கல்கரி பல்கலைக்கழகம். உலக அலவில் 182 ஆவது இடத்தில் உள்ளது. கல்கரி பல்கலைக் கழகம் 1944 இல்அல்பர்ட்டா பல்கலைக்கழகத்தின் கல்கரி கிளையாக நிறுவப்பட்டது.




அதன் பின்னர் 5 வளாகங்களுடன் தனியாகவே செயல்பட்டு வருகிறது கல்கரி பல்கலைக்கழகம். இதன் ஒரு வளாகம் கத்தார் தலைநகர் தோகாவில் அமைந்துள்ளது. 34,000 க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ள இந்த பல்கலைக்கழகம் 250 க்கும் மேற்பட்ட படிப்புகளை வழங்கி வருகிறது.

## University Of Montreal

1878 இல் நிறுவப்பட்ட இந்த பல்கலைக்கழகம், மாண்ட்ரீல் பகுதியில் அமைந்துள்ள பிரெஞ்சு மொழி பொது ஆராய்ச்சி பல்கலைக்கழகமாகும்.



10,000 வெளிநாட்டு மாணவர்கள் உட்பட கிட்டத்தட்ட 67,000 மாணவர்களைக் கொண்டுள்ளது மாண்ட்ரீல் பல்கலைக்கழகம்.

தொடர்ச்சி ▼

# கல்விக்கு என புகழ்பூத்த கனடியப் பல்கலைகள்!

தொடர்ச்சி▲

## Western University

கனடாவிலேயே அதிகம் தெரிவு செய்யப்படும் பல்கலைக்கழகங்களில் 6 ஆவது இடத்தில் உள்ளது. உலக அளவில் 114 ஆவது இடத்தில் உள்ளது. கனடாவின் சிறந்த ஆராய்ச்சி பல்கலைக்கழகங்களில் ஒன்று.



மட்டுமின்றி மதிப்புமிக்க U15 ஆராய்ச்சி குழுவின் நிறுவன உறுப்பினர் இந்த Western பல்கலைக்கழகம். 1878ல் நிறுவப்பட்ட Western பல்கலைக்கழகத்தில் 43,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதில் சுமார் 10,000 சர்வதேச மாணவர்கள் 129 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

## University Of Waterloo

உலக அளவில் 112 ஆவது இடத்தில் இருக்கும் இந்தப் பல்கலைக்கழகமானது கனடாவில் 5 ஆவது இடத்தில் உள்ளது. 1956 நிறுவப்பட்ட இந்தப் பல்கலைக்கழகமானது ரு15 ஆராய்ச்சி குழுவின் உறுப்பினராகும்.

## University Of Alberta




கனடா உட்பட 156 நாடுகளைச் சேர்ந்த 44,000 மாணவர்கள்அல்பர்ட்டா பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்கின்றனர். கனடாவிலேயே தரவரிசையில் 5 ஆவது இடத்தில் இருக்கும் இந்தப் பல்கலைக்கழகம், உலக அளவில் 111 ஆவது இடத்தில் உள்ளது.



மொத்தமாக 5 வளாகங்களைக் கொண்ட இந்தப் பல்கலைக்கழகமானது 200க்கும் மேற்பட்ட கற்கைத் துறைகளை வழங்கி வருகிறது.

## The University Of British Columbia

உலக அளவில் 34 ஆவது இடத்தில் இருக்கும் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம், கனடாவில் 3 ஆவது இடத்தில் தெரிவாகியுள்ளது. கல்வி நற்பெயருக்கு மிக உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம், கனடா



வில் மிகவும் மதிப்பு வாய்ந்தது.

70,000 மாணவர்கள் பயிலும் இந்தப் பல்கலைக் கழகத்தில் இருந்து இதுவரை 8 பேர்கள் நோபல் பரிசு பெற்றுள்ளனர். மட்டுமின்றி, 65 பேர்கள் ஒலிம்பிக் பதக்கம் வென்றுள்ளனர் மற்றும் 74 பேர்கள் ரோட்ஸ் அறிஞர்கள்.

## McGill University

மாண்ட்ரீல் பகுதியில் அமைந்துள்ள இப்பல் கலைக்கழகமானது கனடாவில் 2 ஆம் இடத்தில் தொடர்ந்து நீடிக்கிறது. உலக அளவில் 30 ஆவது இடத்தில் உள்ளது. கனடாவின் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பயின்ற பல்கலைக் கழகமிது.



மட்டுமின்றி, இந்தப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கள் 12 பேர்கள் நோபல் பரிசு பெற்றுள் ளனர்,.145 பேர்கள் ரோட்ஸ் அறிஞர்கள் ஆவார்கள்.

## University Of Toronto

உலக அளவில் 21வது இடத்தில் இருக்கும் ரொறன்ரோ பல்கலைக்கழகம், கனடா மக்களின்



முதல் தெரிவாக உள்ளது. ரொறன்ரோவில் மட்டும் மூன்று வளாகங்கள் செயல்பட்டு வருகிறது.

மொத்தம் 97,000 மாணவர்கள் கல்வி பயில் கின்றனர். நூலகங்கள் மட்டும் 42 செயல்படுகின்றன. அத்துடன் 1,200க்கும் மேற்பட்ட மாணவர் கிளப்புகள், அமைப்புகள் மற்றும் செயல்பாடுகளைக் கொண்டுள்ளது ரொறன்ரோ பல்கலைக்கழகம்.